2. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஈ) நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு 1981 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் :—பேரவைக்கு ஓர் அறிவிப்பு, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

4. அரசினர் சட்டமுன் வடிவுகள்—(தொடர்ச்சி)

(ஆ) நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு, 1981.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—" தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை " பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

—தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 7–2–1981 காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–02 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS